★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 15..

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 6உ புதன் (18—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 7உ வியாழன் (19—4—56) [இதழ் 262

காணமற்போன பர்மியத் தலைவர்

இரங்கூன், ஏப். 17—

பர்மாவில் நடைபெறவிருக்கிற பொதுத் தேர்தலுக்கு ஷான் மாகாணத்திலிருந்து போட்டியிடுவதாக அறிவித்திருந்த யுதுன்றா என்ற பர்மியத் தலைவர் ஒருவர் கடந்த ஏப்ரல் 4-ந் தேதி முதல் காணப்படாமலிருந்ததாயும், ஆனல் இன்று, தமது தொகுதியில் உள்ள மலைப்பிரதேசத்தில் குண்டுக் காயங்களுடன் செத்துக்கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது.

இவருடன் காரில் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்ற வேறு ஒருவரும் கார் ஓட்டியும்கூட குண்டுக்காயங்களுடன் அங்கு இறந்து கிடந்தார்களாம்.

ஆந்திர காங்கிரஸ் முகாமில் உள்ளடிக்குழப்பம்

‘நிலச் சீர்திருத்தம் செய்வதில் ஆந்திர ஆட்சிக்கு அக்கரை இல்லை’

‘தேர்தல் வாக்குறுதிக்கு மதிப்பு வைத்து நடக்கத் தவறி விட்டது’

‘பிரதேச காங்கிரஸ் தலைவர் எழுதிய கடிதங்களுக்கு பலன் கிட்டவில்லை’

ஆந்திர காங்கிரஸ் தலைவர்வெளிப்படையான தாக்குதல்

“நிலச்சீர்திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் ஆந்திர அரசாங்கத்திற்கு அக்கரையில்லை என்பதை என்னல் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை.”

“நிலச்சீர்திருத்தம் செய்ய வேண்டியதின் உடனடித் தேவையை ஆந்திர ஆட்சித் தலைவர் அறியச் செய்யாமல் இருப்பேனுனல், என் கடமையை நான் தவறியவனுவேன்”

என்றக் கருத்தை ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் தலைவர் அல்லூரி சத்தியநாராயண ராஜு அறிவித்துள்ளார்.

“வெளிப்படையாகக் குறை கூறுவதற்கு முன், ஆந்திர கட்சித் தலைமைக்கு என் இத் தேவை உணர்த்தக்கூடாது?’ எனக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, ‘ஏன் நீங்களாக ஒன்றை கற்பனைச் செய்துக் கொள்ளுகிறீர்கள் ?’ எனப் பதில் வினு போட்டுவிட்டு, “நிலச்சீர்திருத்தத்தின் அவசியம் குறித்துப் பல கடிதங்கள் ஆந்திர முதலமைச்சருக்கு எழுதியாகிவிட்டன. அதற்குப் பின்னரும் கூட, தேர்தல் கால வாக்குறுதிக்கு மதிப்பளிக்க மறுக்கப்பட்டு வருகிறது ஆட்சி” என்ற உண்மை நிலையை உணர்ந்தார் ஆந்திர காங்கிரஸ் தலைவர்.

“ஆந்திர அரசாங்கப் போக்கை நான் வெளிப் படையாகக் கண்டிப்பது நியாயமற்றது என்பதானுல், காங்கிரஸ் கட்சியை ஆந்திராவில் கலைத்துவிட வேண்டும்” என்றார் அவர்.

திட்டக்குழு, ஆகிய இந்திய காங்கிரஸ் குழு, ஆந்திர பிரதேச காங்கிரஸ் ஆகிய அனைத்தும் நிலச் சீர்திருத்தத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இவ்வளவிற்குப் பிறகும் ஆந்திர ஆட்சி, அதுபற்றி அக்கரை கொள்ளாமல் இருக்கிறது.

“ஐதராபாத்தில், நிலவுடைமைக்கு வரம்பு கட்டி இருப்பது பாராட்டத்தக்கதாகும். அதன் உயர்ந்தபட்ச நிலக் கட்டுப்பாடு மிகவும் நியாயமானதேயாகும். ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 3,000 நிகர வருமானம் தரக்கூடிய வகையில் நிலவுடைமைக்கு வரம்பு ஏற்படுத்துவது வரவேற்கத்தக்கதாகும். திட்டக்குழு உயர்ந்தபட்சமாக ரூ. 800 வருமானம் தரக்கூடிய வகையில், நிலவுடைமைக்கு வரம்பு கட்டி இருப்பது பொருந்தக்கூடியதாகாது,” என்றும் ஆந்திர காங்கிரஸ் தலைவர் அறிவித்தார்.

காங்கிரஸ் தொழிற் சங்கத்தின் ‘குண நலன்கள்’

மேற்கு வங்க தேசீய தொழிற்சங்கத் தலைவர்தரும் விளக்கம்

“இன்றுள்ள அமைப்பு முறையில் இந்தி தேசிய தொழிற் சங்கக் காங்கிரசினுல் நன்மை செய்ய இயலாது என நான் நம்புகிறேன். இந்திய தேசிய தொழிற்சங்கக் காங்கிரசு அமைப்பில் அதிகமாக முதலாளிக் குணம் ஏற்பட்டு வருகின்றது. இதன் போக்கெல்லாம் குடியரசுக்குப் புறம்பானது; தொழிலாளருக்கு விரோதமானது; முதலாளிக்கு ஆதரவு தருவது!”

என்று, இந்திய தேசீய தொழிற்சங்கக் காங்கிரசின் மேற்கு வங்க மாநிலக்குழுவின் முக்கியத் தலைவர் தேவன் சென் பேசியுள்ளார்.

இவர் காங்கிரசு தொழிற் சங்கத்திலிருந்து விலகி, மேற்கு வங்கத்திலுள்ள 127 தொழிற் சங்கங்களுடன் இந்த் மஜ்தூர் சபாவில் சேர்ந்து விட்டார்.

தேவன்சென் சேர்ந்துள்ள இந்த் மஜ்தூர் சபா சணல், நிலக்கரி, தேயிலை, துணி, ‘என்ஜினீயரிங்’ தொழில்களைச் சேர்ந்த 50,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டதாம்.

ரஷ்யாவுடன் ராஜீய உறவு

கம்போடியா சம்மதம்

‘இராஜீய உறவுகொள்ள விரும்புகிறோம்’ என்ற ரஷ்யா தெரிவித்த யோசனையை கம்போடியா ஏற்றுக்கொண்டுவிட்டதாக தெரியவருகிறது.

பெண்களின் சேமிப்பு இயக்கத்தின்கீழ் இதுவரை மொத்தம் ரூ. 2½ கோடிக்குமேல் வசூலாகியுள்ளது.

வடவருக்கு கொடி பிடிக்கும் கோணங்கிகள்

சென்னை மந்திரி சபையினருக்கு ஈ. வெ. கி. சம்பத் சாட்டை

மசோதாவின் உயிர் கவர்னர் கையெழுத்தல்ல; மக்களின் தெளிவான சம்மதமே

மாநிலப் புது அமைப்பு மசோதா இறுதியானது என்ற இறுமாப்பு வேண்டாம்

சென்னைக் கூட்டத்தில் முழக்கம்!

சென்னை மந்திரிகள் வடவருக்குக் கோடிபிடிக்கும் கோணங்கிகளாயிருக்கும் நிலைகண்டு கொதிக்காத தமிழரே இல்லையெனலாம். அந்த மந்திரிகள் மாநிலப் புது அமைப்பு விவகாரத்தில், தமிழர்களுக்கு அநீதி இழைக்க துணை நின்ற கேவலத்தைச் சாடினுர் தோழர் சம்பத்.

‘தமிழ் நாடு என்று ஏன் பெயரை மாற்றவில்லை ?’ என்ற கேள்விக்குச் சென்னை சர்க்கார் பதில் தரமுடியுமா ? என்று சாட்டையடி தந்தார் சம்பத்.

கடந்த திங்களன்று சென்னை பெத்துநாய்க்கன் பேட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், ‘மாநிலப் புது அமைப்பு மசோதா’ பற்றிய தீர்மானம் பிரேரேபிக்கப்பட்ட விதத்தைக் கூறி, இழிநிலை மாறவேண்டும் என்று இடித்துரைத்தார்.

சர்க்கார், காங்கிரஸ் கைகாட்டி மரங்கள் கைதூக்கியதால் கிடைத்த பெரும்பான்மையைப் பெரிதென எண்ணி, மாநிலப் புது அமைப்பு மசோதாவே, தேவிகுளம் பீர்மேடு விவகாரங்களுக்கு, இறுதியான பரிகாரம் என்று இறுமாப்புகொள்ள வேண்டாம் என்று எச்சரித்தார் தோழர் சம்பத்.

அவரது சொற்பொழிவின் முதற் பகுதி இங்கு தரப்படுகிறது:—

“இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியலில் கடந்த சமீப காலத்தில், விசித்திரமான—என் விபரீதமான மாறுதல்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன.

“‘செய்தோம் தவறுகள்; செய்தோம் தவறுகள்,’ என்று ஒவ்வொரு ஆண்டும் கூறிக்கொண்டு, வருகின்றன, நாட்டில் உள்ள அத்தனை கட்சிகளும்—ஆளும் கட்சி உட்பட. ஆனல், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான், இந்தக் குழப்பமான நிலையை அடைந்துவிடாமல், நாம் கொண்ட இலட்சியத்தில் நாளுக்கு நாள் உள்ளப் பிடிப்பு வலுப்பட்டு, வளர்ந்து வருபவர்களாக இருக்கிறோம்.

“நேற்று வாழ்த்துக்குரியவர்கள், இன்று வணக்கத்திற்குக்கூட உரியவர்களல்லர் என்ற நிலை, நமக்கு ஏற்படுவதில்லை.

“இரண்டாண்டுகளுக்கு முன் காங்கிரசானுலும், அல்லது வேறெந்தக் கட்சிகளானுலும்சரி, தி மு கழகத்தைப் பற்றிக்கொண்டிருந்த கருத்தை, இன்று, நிச்சயம் அவர்கள் மாற்றிக்கொண்டிருக்கிறுர்கள்.

“நாம் பிறந்த நேரத்தில், இந்த நாட்டில், உள்ள அரசியல்வாதிகள் என்ன நினைத்தார்கள்? இதுகள் நேற்று பெய்த மழையில் இன்று முளைத்துள்ள காளான்கள். நாளை அடிக்கும் வெயிலில் காய்ந்துபோய் விடுவார்கள் என்றுதான் கணக்கிட்டனர்.

“இதுகள் இரண்டாவது ஆண்டு விழா கொண்டாடுமா ? மூன்ருவது ஆண்டு விழாவிற்கு நீடித்திருக்குமா ? என்று கேட்டுக் கொண்டிருந்தனர்.

“மாநில மாநாடு — இதுதான் முதலும் கடைசியும் இதுகளுக்கு என்று பேசிக்கொண்டனர்.

“ஆனல், அப்படிக் கணக்கிட்டு திருப்திப்பட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் இன்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டவர்களாயிருப்பதைக் காண்கிறோம்

“தி. மு. கழகம் அழியப் போகிற ஸ்தாபனமல்ல; அணையப்போகிற விளக்கல்ல; அழிக்க முடியாத நிரந்தரமான இயக்கம் என்பதை நமது பகைவர்களும்கூட இன்று உணர்ந்துவிட்டார்கள்.

“தி. மு. கழகம் தோன்றியதினுல் மக்கள் ஏதோ மிரண்டு

(4-ம் பக்கம் பார்க்க

டில்லி மீது ‘படையெடுக்க’ மராட்டியர் முடிவு!

மராட்டியர் டில்லி மீது ‘படையெடுக்க’ முடிவு செய்துவிட்டனர் என்று தெரியவருகிறது.

சம்யுக்த மராட்டிய சமிதி என்ற நிறுவனத்தின் பொதுச் செயலாளர் இந்த முடிவைத் தெரிவித்திருக்கிருராம்.

பூனுவிலிருந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில், அவர் மராட்டிய வீரர்களில் ஒரு படையினர் டில்லிக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் அங்கு அவர்கள், மக்கள் சபை முன்பாக, ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள் என்றும், ‘பம்பாய் மராட்டியத்துடன் தான் இணையவேண்டும், சம்யுக்த மராட்டியம் அமைந்தே ஆகவேண்டும்’ என்று வற்புறுத்துவதே ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் என்றும், தெரிவித்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

மாநில மாநாடு மலர்த் தோட்டமல்ல

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18—4—'56 புதன்

'சின்ன கிளர்ச்சி! சிறிய தியாகம்!'

'சின்ன கிளர்ச்சி! சிறிய தியாகம்!' எனக் கேலி பேசுகிருர், நமது திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கி நடத்திய நியாயமானக் கிளர்ச்சிகளைக் கண்டு, காலப் பிணக்கால், நமக்கு நாடாளும் நாயகராக வந்து வாய்த்திருக்கும் முதலமைச்சர் கனம் காமராசர் அவர்கள்.

நமது கழக வீரர்கள் ஈடுபட்டக் கிளர்ச்சிகளையும், அதன் விளைவாகப் பெற்றத் தியாக முத்திரைகளையும், மிகமிகச் சிறியவை என நையாண்டி செய்யத்தான் அவருக்கு புத்தி இருந்ததே அல்லாது, அதனை மெய்ப்பிப்பதற்கான நியாயமான காரணங்களைக் கூற வேண்டுமே என்ற நல்லுணர்வு முதலமைச்சருக்கு இல்லாது போய்விட்டது.

நம்மீது வீசிய எளனத்தை உறுதி செய்வதற்கான காரணங்களை விளக்கிக்கூற, அவர் தவறிவிட்டதைக்கூட நாம் மறந்துவிடலாம். ஆனல் பெரிய கிளர்ச்சி பெரிய தியாகம் எவை என்பவற்றையாவது அவர் விளக்கி இருந்தால், நாமாவது, நமது கிளர்ச்சிகளை, அவைகளுடன் ஒப்பவைத்து நோக்கி, நுணுகி ஆராய்ந்து நமது கிளர்ச்சிகளின் தன்மையையும் தரத்தையும், நாமேயாவது நிச்சயித்துக்கொண்டிருக்கக்கூடும். அதைக் குறிப்பிடவும், முதலமைச்சர் தவறிவிட்டார்.

பெரிய கிளர்ச்சி—பெரிய தியாகம் என்பன பற்றிய உண்மையை, உலகம் தெரிந்துகொண்டிருக்கும் என்ற நம்பிக்கையினுல், நாமும் அறிந்துகொண்டிருக்கக்கூடும் என்ற நினைப்பில், ஒருவேளை முதலமைச்சர், அவைகளை விளக்காமல் விட்டிருந்தாலும் இருக்கக்கூடும்.

பெரிய கிளர்ச்சி எது? பெரிய தியாகம் யாது?—என்ற இரண்டிற்கும், முதலமைச்சர் பொருத்தமான விளக்கம் கூருத காரணத்தால், அவை இரண்டினுடைய உருவங்களையும், உள்ளடக்கங்களையும் கணித்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் நமக்கே ஏற்பட்டுவிட்டது.

காங்கிரஸ் கட்சியினர் ஈடுபட்ட ஆகஸ்டு கிளர்ச்சியைத்தான், பெரிய கிளர்ச்சி எனக் கருதிக்கொண்டு, அதில் பங்குகொண்டவர்களைத்தான் பெரிய தியாகிகள் எனவும் காமராசர் அவர்கள் எண்ணிக் குறிப்பிடுவதாக நாம் யூகிக்கலாம். அந்த யூகம் தவருனதல்ல என்பதும் ஒப்பக்கூடியதேயாகும்.

ஆகஸ்டு கிளர்ச்சியில் காங்கிரஸ்காரர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள், தந்திக் கம்பியை அறுப்பதும், தண்டவாளங்களைப் பெயர்த்து புகைவண்டிகளைக் கவிழ்ப்பதும், தபால் பெட்டிகளில் தீவைப்பதும், அரசாங்க அலுவலகங்களை இடித்துத் தரைமட்டமாக்குவதும், அதிகாரிகள் மீது எரிநீர் ஊற்றி சித்திரவதை செய்து கொல்வதுமாகத்தான் இருந்தன என்பது பகிரங்க இரகசியம். அவை அனைத்தும் பலாத்கார நடவடிக்கைகளேயாகும்.

அப்பலாத்காரச் செயல்கள், காந்திய அகிம்சா முறைக்கு நேர்முரணானதாகும். அகிம்சைதான் தங்களுடைய அரசியல் நடைமுறை என நீண்ட காலமாக மக்களை நம்பச் செய்து வந்த காங்கிரஸ் கட்சி, அந்த நம்பிக்கையை, ஆகஸ்டு கிளர்ச்சியின் மூலம் உடைத்தெறிந்துவிட்டது.

ஆகஸ்டு கிளர்ச்சியில் காங்கிரஸ் முரண்பட நடந்து கொண்டது ஒரு பக்கம் இருக்கட்டும். அதைப் போன்ற 'பெரிய கிளர்ச்சி'யில், திட்டமிடப்பட்டு ஒழுங்கு படுத்தப்பட்ட பலாத்காரக் கிளர்ச்சியில், நமது கழகமும் ஈடுபட வேண்டும் எனத் தாம் விரும்புகிருர், என்பதைத்தான் நம்மைப் பார்த்து முதலமைச்சர் பேசும் நையாண்டி சுட்டிக் காட்டுகிறது.

காங்கிரஸ் கட்சி போன்று, ஆகஸ்டு கிளர்ச்சியின்போது உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று நடந்துகொண்டது போல், நமது கழகம் என்றும் நடந்துகொள்ளாது; பலாத்காரச் செயல்களை உள்ளத்தால் உள்ளவும் உள்ளாது என்பதை உறுதியாக உணர்த்திவிடுகிருேம். எனவே, நமது கிளர்ச்சியை 'சிறிய கிளர்ச்சிகள்' எனக் கேலி பேசுவதின் மூலம், நமது சீற்றம் கிளப்பப்பட்டு, நம்மையும் பலாத்காரச் செயல்களில் இறங்கவைத்து, அதன் விளைவாக நமது கழகத்தை மிகச் சுலபமாக ஒடுக்கிவிடலாம், என்று அவர் கொண்டுள்ள நம்பிக்கை, என்றும் வெற்றி பெறுவது முடியாது என்பதை அவருக்கு நினைவூட்டிவிடுகிருேம்.

காங்கிரஸ் நடைமுறையிலிருந்து கிடைத்துள்ள படிப்பினைப்படி, காங்கிரஸ் கட்சி எப்பொழுது, எந்தக் கட்டத்தில் பலாத்காரத்தில் கண்ணை மூடிக்கொண்டு குதித்தது என்பது ஆராய்ந்து அறியத்தக்கதாகும். அதாவது, கொடிய நாஜியரை எதிர்த்தும், ஜப்பான் திடீர் தாக்குதலைத் தாங்கியும், ஆங்கில ஏகாதிபத்தியம் பல போர்க்களங்களில் எதிர்காலத்தைப் பணயம் வைத்து, உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த நேரமாகப் பார்த்தல்லவா, பலாத்காரச் செயல்களை மட்டுமே உள்ளடக்கமாகக் கொண்ட ஆகஸ்டு போராட்டத்தில் காங்கிரஸ் கட்சி தலைகுப்புற குதித்தது? எதிர்பார்த்திருந்த வல்லரசுகளின் தாக்குதலும் மிஞ்சி, தன் படை பலமும் மிகக்குன்றி, ஆங்கில ஏகாதிபத்தியம் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்தத் தருணத்தில் அல்லவா, காங்கிரஸ் கட்சி, புனிதமான அகிம்சா தத்துவத்தை உதறித் தள்ளிவிட்டு, கையில் கிடைத்ததைக் கொண்டு நாட்டு விடுதலைக்காகப் பலாத்காரச் செயலில் ஈடுபட்டது? நிற்க.

அது எவ்வளவு பெரிய கிளர்ச்சியாக இருந்தாலும், அதில் ஈடுபடுகிறவர்களுக்கு ஏற்படுகின்ற தியாக வடுக்கள் எத்தகையப் பெரியதாக இருந்தாலும், அந்த ஆகஸ்டு பண்பு, நமது கழகக் காளையர்களைப் பற்றவே வேண்டாம். அகிம்சா கோட்பாட்டையேமுடிவுவரையில் பின்பற்றி, இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலையைப்பெற 'மகத்தான' காங்கிரஸ் கட்சி தவறிவிட்டது; ஆனல் அகிம்சா கருத்தையே இறுதிவரை புனித நடைமுறையாகக்கொண்டு இந்திய ஏகாதிபத்திய அரசிடமிருந்து, திராவிடத்தை விடுவித்தனர் மிகச் 'சிறிய' கட்சியாக விளங்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்ற நற்பெயர் உலக விடுதலை வரலாற்றில் இடம் பெறுவதையே நாம் விரும்புகிருேம். திருவிட விடுதலை முரசைக் கேட்க, கனம் காமராசர் மேலும் சில ஆண்டுக் காலம் உயிருடன் வாழ வேண்டும் என்பதே நமது பெரு விழைவு.

'சிறிய கிளர்ச்சி! சிறிய தியாகம்!' என்ற உறுதியான நம்பிக்கையுடன் தான், முதலமைச்சர், நம்மைக் கிண்டல் செய்வது உண்மையாக இருக்குமானல், நாம் அதிகாரத்துக்கு வந்துவிடுவோமோ என அவருக்கு அச்சம் ஏற்பட நியாயமே இல்லை. ஆனல், அவருக்கு அந்த அச்சம் பலமாக இருக்கிறது!

வளர்ந்துள்ள உடற்கட்டு வாய்ந்த ஒருவர், இளைஞகை உள்ள ஒருவனைக் குத்துச் சண்டைக்குக் கூப்பிடுவது போலத்தான் இருக்கிறது—கனம் காமராசர் நம்மைப் பார்த்து 'சிறிய கிளர்ச்சி! சின்ன தியாகம்!' எனக் கேலி பேசுவதும்!

வேலையற்ருேர் எண்ணிக்கை

அதிகரிக்கிறது!

புதுடில்லி, ஏப். 17—

இந்தியாவில், 1956 பிப்ரவரி மாதத்தில், வேலை தேடித் தரும் நிறுவனங்களில், வேலையில்லாதோர் மொத்தம் 7,24,448 பேர் பதிவாகியிருந்தனர்; இந்த எண்ணிக்கை முந்திய மாதத்திலிருந்ததைக் காட்டிலும் 7,000 அதிகமாகும்.

இம்மாதம் மொத்தம் 15,465 பேருக்கு வேலை தேடித்தரப்பட்டதாம்; 1956 ஜனவரி மாதத்தில் வேலையிலமர்த்தப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 14,753 ஆகுமாம்!

பரிசிலனை மாதத்தில், இடம் பெயர்ந்தவர்கள் மொத்தம் 915 பேருக்கு வேலை தேடித்தரப்பட்டதாம்; இக்காலத்தில் பெயர் பதிவான இடம் பெயர்ந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 6,002. வேலையில் அமர்த்தப்பட்டவர்களில் 349 பேர் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்தும், 566 பேர் மேற்கு பாகிஸ்தானிலிருந்தும் வெளியேறி வந்தவர்களாகும்.

வேலை தேடித் தரும் நிலையங்களில் பதிவாகியுள்ள இடம்பெயர்ந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 47,235 ஆகும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 40,000 ஆசிரியர்களுக்கு கிராம அபிவிருத்தி வேலை திட்டத்தில் பயிற்சியளிக்கப்படும்.

இராணுவத்தில் சீக்கியருக்கு பதவி உயர்வு

அகாலியர் வேண்டுகோளை நேரு நிராகரிக்கிருர்

பதிந்தா, ஏப். 15—

இராணுவத்தில் உள்ள சீக்கியர்கள் உயர் பதவிகளுக்கு உயர்த்தப் படும்போது, சீக்கிய மதக் குருக்களின் சிபாரிசுகளின் பேரிலேயே செய்யவேண்டும் என்று, அகாலியர், பண்டித நேருவிடம் கோரினராம்.

முடி வெட்டிக்கொண்டு, தாடியை எடுத்துவிட்டு, தங்கள் மதத்தை அவமதிக்கிற சீக்கியர்களைத் தடுப்பதற்காக இந்த முயற்சியாம். முன்பு இந்தப் பழக்கம் இருந்தது உண்டாம்.

இந்தத் தகவலை கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஹீகும் சிங் என்ற அகாலி தலைவர் (மக்கள் சபை உதவித் தலைவர்) தந்திருக்கிருர்.

அவர், இது குறித்து பிரதமர் நேருவுக்குக் கடிதம் எழுதியிருக்கிருராம்.

நிர்ப்பந்தமாக ஒருவரை மதம் மாறச் செய்வது எப்படி அரசியல் சட்டத்திற்கு விரோதமானதோ, அதேபோல ஒருவரை கட்டாயம் சீக்கியராகவே இருக்குமாறு கோருவதும் விரோதமாகும் என்று பிரதமர் நேரு பதிலிறுத்திருக்கிருராம்.

பூமிதான இயக்கத்திற்கு உதவ

இங்கிலாந்து பிரமுகர்கள் வேண்டுகோள்

பூதான இயக்கத்திற்கு பெட்ரண்டு ரசல் உள்ளிட்ட ஏழு பிரபல இங்கிலாந்து பிரமுகர்கள் உதவி புரிய முன்வந்திருக்கின்றனராம்.

"இந்தியாவில் ஆச்சாரியா வினேபாபாவேயின் பூதான இயக்கத்தினுல் பயன்பெறும் கிராம மக்கள் இப்போது, கிணறு வெட்டிக் கொள்ளவும் விவசாயக் கருவிகள் வாங்கிக் கொள்ளவும், பணமின்றிக் கஷ்டப்படுகிருர்கள். எனவே அவர்களுக்குப் பண உதவி செய்ய கேட்டுக்கொள்கிருேம். அப்படிச் செய்வது, காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த சாதாரண மக்களிடையே நல்லுறவை வளர்க்க உதவக்கூடியதாகும். அதுதான், காமன்வெல்த்தின் முக்கியமான அம்சமுங்கூட. எனவே, இங்கிலாந்து மக்கள் தாராளமாக நிதி உதவ வேண்டுகிருேம்,"

என்று, அந்த ஏழு பேரும் கையெழுத்திட்டு, 'மாஞ்செஸ்டர் கார்டியன்' என்ற இதழில் கடிதம் ஒன்று தீட்டியுள்ளனராம்.

மற்றுமோர் இராணுவ ஒப்பந்தம்

அமெரிக்கா உருவாக்குகிறது?

லண்டன், ஏப். 15—

பாக்தாத் இராணுவ ஒப்பந்தத்தைப்போல மற்றுமோர் ஒப்பந்தம் மத்தியதரைக் கடல் பிரதேசத்தில் உருவாக்க அமெரிக்கா திட்டமிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்தத் தகவலை மாஸ்கோ வானொலி அறிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்திற்கான திட்டத்தை ஸ்பெயின் வெளி விவகார இலாகா மந்திரியும், அமெரிக்காவும் சேர்ந்து தயாரிக்கிருர்களாம்.

நகரசபை நடத்திய தொழில் கல்வி நிலையம்

மாநிலசர்க்கார் மேற்கொள்ளுகிறது

சூரத் நகரசபை, தான் நடத்தும் பரேக் தொழில் நுணுக்கக் கல்வி நிலயத்தை, மாநில சர்க்கார் வசம் ஒப்புவித்துவிட முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இந்தக் கல்வி நிலயம், சர்க்கார் நடத்தும் தொழில் நுணுக்கக் கல்வி நிலயத்துடன் சேர்க்கப்பட்டுவிடுமாம்.

என்றாலும், நகரசபை ஆண்டொன்றுக்கு ரூ 10,000 மானியம் வழங்கும் என்றும், இப்போது இங்குள்ள ஊழியர்கள் அனைவரையும் சர்க்கார் வேலைக்கு வைத்துக் கொள்ளும் என்றும் தெரிகிறது

இந்தியாவின் அழைப்பை ஏற்க

தலாய் லாமா மறுப்பு!

இந்தியாவில் புத்தர் பிரானின் 2,500-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்படும்போது, அந்த விழாவில் கலந்துகொள்ளுமாறு, இந்திய சர்க்கார் சீனவில் உள்ள திபெத்தைச் சேர்ந்த தலாய் லாமா, பஞ்சன்லாமா மற்றும் முக்கியமான புத்த மதக்காரர்களை சீன சர்க்கார் மூலம் அழைத்திருந்தனர். ஆனல், தலாய்லாமா, மற்றும் பஞ்சன் லாமா இருவருக்கும் ஏராளமாக வேலை இருப்பதாகக் கூறி இந்தியாவின் அழைப்பை ஏற்பதற்கில்லை என்று தெரிவித்துவிட்டனராம்.

இந்தியா அழைத்தவர்களில் மூவரை மட்டும்தான் சீன அனுப்பிவைக்கிறது; இதர எட்டு பேர்கள், சீனவே தேர்ந்தெடுத்து அனுப்பும் பிரதிநிதிகளாகும்.

சேது சமுத்திரத் திட்டம்

ரூ. பத்து கோடி செலவாகும்

புதுடில்லி, ஏப். 16—

மன்னர்குடாவை பாக் ஜலசந்தியுடன் இணைப்பது பற்றிய சேது சமுத்திர திட்டம் குறித்துப் பரிசீலனை நடத்திய நிபுணர்கள் குழு தனது அறிக்கையை ஒப்படைத்துவிட்டதென்று துணை இரயில்வே அமைச்சர் ஒ. வி. அழகேசன் மக்கள் சபையில் அறிவித்தாராம்.

இது பற்றி அவர் மேலும் கூறியதாவது:—

"கப்பல் போகக்கூடியவாறு பாம்பன் பாலத்திற்கு மேற்கே ஒரு கால்வாய் வெட்டுவதுடன், அதே சமயத்தில் 'தூத்துக்குடி துறைமுகத்தை ஓர் ஆழமான துறைமுகமாகச் செய்வதும் இயலுவதொன்றே என்று நிபுணர்கள் குழு அறிக்கை ஒப்படைத்துள்ளது இவ்வேலைகளைச் செய்வதற்கு சுமார் 10 கோடி செலவாகும் என்று குழு மதிப்பிட்டுள்ளது.

புதுவை முன்னேற்றம்

ரூ. 5 கோடி செலவிடப்படும்

புதுச்சேரி, ஏப். 16—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் புதுச்சேரியின் முன்னேற்றத்திற்கு ரூ. 5 கோடி செலவிட திட்டக் குழு உறுதியளித்திருப்பதாக புதுச்சேரி சர்க்காரின் பிரதம 'கமிஷனர்' வி. எஸ். மாத்யூஸ் ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

மாவீரர் கோட்டம்; மறவர் பாசறை!

ஆதாரமற்ற ஒத்திவைப்பு தீர்மானம்

மக்கள் சபையில் பலத்த கண்டனம்

ஒருவரும் இறக்காதபோது ஏழெட்டுப் பேர் மாண்டதாகக் கூறப்பட்டதாம்

'ராம ராஜ்ய பரிஷத்'தைச் சேர்ந்த நந்தலால் சர்மா என்ற உறுப்பினர், மக்கள் சபையில் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று ஆதாரமற்றதாக இருந்ததால், சபைத் தலைவர், உள்நாட்டு மந்திரி, பிரதம மந்திரி ஆகியோரின் பலத்த கண்டனத்திற்கு ஆளாகியிருக்கிறது.

கடந்த ஏப்ரல் 14-ந் தேதியன்று டில்லியில் புசாலையருகே, போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததின் விளைவாக ஏழு—எட்டு பேர் வரை செத்துப்போனதாகவும், அது குறித்து விவாதிப்பதற்காக சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்றும் அந்த உறுப்பினர் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்திருக்கிறார்.

உடனே உள்நாட்டு மந்திரி எழுந்து, 'உறுப்பினர் கூறுவது போல் தடியடி நடைபெறவில்லை; ஒரு ஈகூட கொல்லப்படவில்லை,' என்று கூறிவிட்டு, 'இதுபோன்று பொறுப்பற்ற முறையில், தீர்மானம் ஒன்றை உறுப்பினர் கொண்டுவந்தது மிக வருந்தத்தக்குறியதாயிருப்பதுடன், சபையின் கௌரவத்திற்கு இழுக்குத் தேடுவதாகவும் உள்ளது' என்று, கடிந்துகொண்டார்.

சபைத் தலைவர், உள்நாட்டு மந்திரியின் கருத்தை ஆமோதித்து வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

அதைத் தொடர்ந்து பிரதமர் நேரு, 'இது வெறும் சம்பவத்தை மிகைப்படுத்திக் கூறுவது என்ற அளவோடு நின்றுவிடவில்லை; அதற்கும் அப்பாற்பட்ட ஒன்றாகும்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்

உறுப்பினர் சர்மா, தான், சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சென்றிருந்தபோது, சம்பத்தைக் கண்ணால் கண்டவர்கள் கூறிய தகவல்களையே அடிப்படையாகக் கொண்டதாக சமாதானம் கூறியிருக்கிறார்.

உடனே அனந்தன் நம்பியார் எழுந்து, தானும் சம்பவம் நடைபெற்றது இடத்திற்குச் சென்றிருந்தாயும், அங்கு தடியடிப் பிரயோகம் நடைபெற்றது உண்மையெனச் சொல்லக் கேட்டதாகவும் கூறியிருக்கிறார்.

உடனே உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் எழுந்து, 'நம்பியார் செல்லுகிற இடங்களில் எல்லாம் முன் தினமே தடியடிப் பிரயோகம் நடைபெறும் என்று நாமாகவே நினைத்துக்கொண்டாலன்றி, நம்பியார் சொல்வதில் உண்மையிருப்பதாகக் கொள்வதற்கில்லை' என்று கூறிவிட்டு, சம்பவத்தை விளக்கியிருக்கிறார்.

ஹிராகுட் திட்டம்

முடிவடைந்து விட்டதாம்!

பலன்களை இந்த ஆண்டிலேயே அனுபவிக்கலாமாம்

சாம்பல்பூர், ஏப் 15—

ரூ. 70 கோடி செலவில் உருவாகும் ஹிராகுட் பல்நோக்குத் திட்டம் இந்த ஆண்டு ஆகஸ்டு திங்களில், ஏறத்தாழப் பெரும் பகுதி நிர்மாணித்து முடிந்துவிடும் என்று அறிவிக்கப்படுகிறது.

பாசனத்திற்கு நீரும், தொழிலுக்கு மின்சாரமும் அப்போது முதல் கிடைக்கத் தொடங்கிவிடுமாம்.

திட்டம், வரும் நவம்பரில் முற்றிலும் பூர்த்தியாகிவிடுமாம்.

வரப்போகிற விவசாய காலத்தில் சுமார் ஒரு இலட்சம் ஏகருக்கு நீர்ப்பாசன வசதி தரப்படுவதுடன், 24,000 கிலோவாட் மின்சாரமும் தரப்படுமாம்.

இராஜஸ்தானில் எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலை?

ஆராய்ச்சிகள் உற்சாக மூட்டுகின்றனவாம்!

இராஜஸ்தான் மாநிலத்தில் எண்ணெய் ஊற்றுகள் உண்டா? அங்கு எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை நிறுவ முடியுமா?—என்பதை, டெல்லி சர்க்கார், கனடா நாட்டு நிபுணர்களைக் கொண்டு ஆராய்ச்சி நடத்தி வருகின்றனராம்.

அந்த நிபுணர்கள் வழங்கியுள்ள முதல் விசாரணை அறிக்கை, உற்சாக மூட்டக்கூடியதாக இருக்கின்றதாக டெல்லி மந்திரி மாளவியா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

★★★-★★★★-★★★★★★★★★

கழகத் தோழர்களுக்கு

★

உறுப்பினராகச் சேர்ந்துள்ளவர்களுக்குரிய உரிமைச் சீட்டு, மே திங்கள் 1-வது வாரத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.

—தலைமை நிலையம்
தி. மு. கழகம்.

★★★★★★★★★★-★★★★-★★★

புதிய சர்க்கரை ஆலை

சாங்லி, ஏப். 15—

இங்கிருந்து 15 மைல் தொலைவில் உள்ள மாய்சல் எனும் இடத்தில் ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை நிறுவ, முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது.

கூட்டுறவு முறையில் துவங்கத் திட்டமிடப்பட்டிருக்கும் அந்தத் தொழிற்சாலைக்கு, கிராமவாசிகளே உரிமையாளர்களாக இருக்க வேண்டுமென, திட்டம் பற்றி விவாதிக்க நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

'நோட்டீஸ்' தரப்படுமா?

இலங்கையிலிருந்து பிரிட்டன் தனது தளங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்' என்று நியாயமான காலவரையறை நிர்ணயித்து, 'நோட்டீஸ்' தரவேண்டும் என்று இலங்கையின் சுயேச்சை இதழான 'மார்னிங் டைம்ஸ்' குறிப்பிட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பாராட்டுதலுக்குரியவரா?

அவிஞசிலிங்கம் கேள்வி

"அடுத்த ஐந்தாண்டுகளில், கல்வி பெற வேண்டிய பிள்ளைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள இலட்சிய எல்லை மிகவும் குறைவானதாக—கீழ்தரமானதாக உள்ளது. 6 முதல் 11 வயது வரையுள்ள குழந்தைகளில் இப்போதைவிட, இன்னும் ஐந்தாண்டுகள் கழித்து 10 சதவிகிதம் மட்டுமே அதிகமான பேர்கள் கல்வி பெறுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 11 முதல் 14 வயதுடையோரில், 2 சதவிகித உயர்வும், 14 முதல் 17 வயதுடையோரில் ஒரு சதவிகிதமும் மட்டுமே உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. "கல்வி இலாகாவினர் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்று இந்த இலட்சியம் சொல்லுகிறது?"

என்று மக்கள் சபையில், தோழர் அவிஞசிலிங்கம் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அபிவிருத்தி வரி விதிப்பிற்கு எதிர்ப்பு!

ராஜ்கோட், ஏப். 16—

நீர்ப்பாசன வசதிபெறும் நிலங்களுக்கு அபிவிருத்தி வரி விதிப்பதை எதிர்த்து தொராஜி எனும் சௌராஷ்ட்ர நகரில் பெரும் கிளர்ச்சி நடைபெற்றிருப்பதாகத் தெரிகிறது.

நேற்று, சர்க்கார் அலுவலகம் ஒன்றின் முன் 11 பேர்களடங்கிய தொண்டர் படையினர் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த தொண்டர்படையினர் ஊர்வலம் வரும்போது சுமார் 4,000 மக்கள் வரை கலந்துகொண்டிருக்கின்றனர். கைது செய்யப்பட்டவர்கள், மொத்தம் 45 பேர் என்றும் தெரிகிறது.

தொண்டர்கள் தொராஜி நகருக்கு, அங்கிருந்து 20 மைல் தொலைவில் உள்ள உப்லேதா என்ற இடத்திலிருந்து வந்ததாகத் தெரியவருகிறது.

ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளம்

டெல்லியின் நிலை குறித்து விளக்கம்

புதுடில்லி, ஏப். 16—

பயிற்சி பெற்ற துவக்கப் பள்ளி ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தை ரூ 50 ஆகவும், பயிற்சி பெறுதோரின் அடிப்படைச் சம்பளத்தை ரூ 40 ஆகவும் நிர்ணயிக்க இந்திய அரசினர் விரும்புவதாகவும், இது குறித்து மாநில சர்க்கார்களின் கருத்தறிய கடிதங்கள் அனுப்பப்பட்டதாகவும், மாநில சர்க்கார்கள் இதுவரை அனுப்பியுள்ள பதில்கள் நம்பிக்கையைத் தருவதாக இருப்பதாகவும் மக்கள் சபையில் துணைக் கல்வி அமைச்சர் டாக்டர் கே. எல். ஸ்ரீமாலி தெரிவித்துள்ளார்.

இதற்கான செலவுகளைத் தயாரிக்கும்படி மாநில சர்க்கார்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனரென்றும், இதனால் உண்டாகும் உபரி செலவில் 50 சதவிகிதத்தை தர மத்திய அரசியலார் இசைந்துள்ளனரென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நிலக்கரி உற்பத்தி

837 சுரங்கங்களின் இன்றைய நிலவரம்

புதுடில்லி, ஏப். 17—

இந்தியாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களில், நிலக்கரி உற்பத்தி 1956 ஜனவரி மாதத்தில் 32,06,558 டன்னாக இருந்தது—1956 பிப்ரவரி மாதத்தில் 33,57,546 டன்னாக உயர்ந்ததாம்

பரிசீலனை மாதத்தில், 837 நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை நடைபெற்றுவந்ததென்றும், அவற்றில் பிரதி தினம் மொத்தம் சராசரி 3,50,559 தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் சந்தையில் ரஷ்ய வைரங்கள்

மேற்கு நாடுகளுக்குப் பேரிடி?

மாஸ்கோ, ஏப். 15—

"அண்மையில் ரஷ்யாவில் சைபீரியப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் வைரச் சுரங்கங்கள், தென் ஆப்பிரிக்க வைரச் சுரங்கங்களைப் போலப் பெரியவையாகும்"

என்று சோவியத் சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

"சோவியத் ரஷ்யா ஏற்றுமதி செய்யக் கூடிய முக்கியமானதொரு பொருளாக, வைரமும் இருக்கும்"

என்று ரஷ்ய பூகர்ப்ப நிபுணர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

உலகச்சந்தையில் ரஷ்ய வைரங்கள் கிடைக்கும் என்று இப்போது தான் முதன் முறையாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது என்றும், சைபீரியாவில் வைரம் கிடைக்கிறது என்ற தகவல் வந்ததுமே மேற்கத்திய தொழில் வட்டாரங்கள் இந்த அறிவிப்பை எதிர்பார்த்தன என்றும் கூறப்படுகிறது.

1954-ல் மட்டும் 2 கோடி காரட் வைரம் உலகத்தில் உபயோகத்திற்கு வந்தது என்றும், இதில் 60 சதவிகிதத்திற்கு மேலாக தென்ஆப்பிரிக்காவிலிருந்து வழங்கப்பட்டவை என்றும் ஏ பி. புராவ் என்ற ரஷ்ய நிபுணர் தெரிவித்திருக்கிறார்.

ரஷ்யா; உலகச் சந்தைக்கு வைரங்களை அனுப்ப முற்பட்டவுடன், தென் ஆப்பிரிக்காவின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்றும், மேலும் அது லண்டன், ஆம்ஸ்டர்டாம், நியூயார்க் சந்தைகளையும் பாதிப்பதின் மூலம், முதலாளித்துவப் பொருளாதார அமைப்பையும் பாதிக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

12-இலட்சம் பேருக்கு வேலை கிடைக்குமாம்!

புதுடில்லி, ஏப். 15—

"கைக் குத்தல் அரிசி, நாட்டு எண்ணெய் ஆட்டும் தொழில்களுக்கு நிவாரணமளிப்பதன் மூலமும், நவீன முறைகளைப் புகுத்துவதன் மூலமும் சுமார் 12 இலட்சம் பேருக்கு அதிக வேலை வாய்ப்பு கிடைக்கும்"

என்று உற்பத்தி இலாகா அமைச்சர் கே. சி. ரெட்டி கூறியுள்ளார்.

பண்டாரநாயகாவின் முதல் பணி!

மதுக்கடைகள் மூடப்படுகின்றன

கொழும்பு, ஏப் 14—

இலங்கையில், பண்டாரநாயகாவை முதல்வராகக்கொண்ட மந்திரி சபையினர் இன்று முதன் முதலாகக் கூடியபோது, சர்க்கார் நடத்தும் வைபவங்களில், மது வகைகள் வழங்கப்படக்கூடாது என்று தீர்மானித்திருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

இந்தத் தீர்மானத்தை ஒட்டி, மக்கள்சபைக் கட்டிடத்தில் உள்ள மதுக்கடைகளை மூடிவிடவும் முடிவாகியிருக்கிறது

மேலும், வெளிநாடுகளிலுள்ள தூதுவராலயங்கள் எந்த ஒரு அரசாங்க விழாவிலும் மது பரிமாறக் கூடாது என்று சுற்றறிக்கை அனுப்பப்படுமாம்.

பட்டங்கள் தராதீர்!

பிரிட்டிஷ் ராணிக்கு இலங்கை மந்திரி சபை வேண்டுகோள்

முதன் முறையாகப் பண்டாரநாயகா மந்திரி சபை கூடியபோது பட்டங்கள் வழங்குவது பற்றி முக்கியமான முடிவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

'இலங்கைக் குடிமக்களுக்கு எவ்வித கௌரவப் பட்டமும் வழங்காமலிருக்க வேண்கிறோம் என்று பிரிட்டிஷ் ராணியாரை தாழ்மையாகவும் பணிவன்புடனும் கேட்டுக்கொள்கிறோம்;' என்பதே மந்திரி சபையின் முடிவு.

கேட்டிரா, சேதி!

ஜாக்சன், (அமெரிக்கா) ஏப். 15—

640 ராத்தல் எடையுள்ள ஒரு இளைஞருக்கும் — 360 ராத்தல் எடையுள்ள ஒரு மங்கைக்கும் திருமணம் நடைபெற்றதாம். இருவருடைய வயதும் 23 தானாம்! அண்மையில், சிக்கா கோவில் இருவரும் சந்தித்து காதல் கொண்டனராம்.

'பஸ்' மூலம் ஊரூராகச் சுற்றும் ஒரு கோமாளிக் 'கம்பெனி'யில் மணமகன் ஒரு முக்கிய நடிகராம். திருமணப் பதிவு அலுவலகத்திற்கு அவர் நடந்துவர இயலாததால், 'பஸ்' வண்டியிலேயே அத்தம்பதிகளின் திருமணம் நடைபெற்றதாம்!

எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டும் வேலையிலும், இதர நுட்பச் செய்முறைகளிலும் பயிற்சி பெற்று வருவதற்காக, இந்தியத் தொழில் நுட்ப சிப்பந்தி 'கோஷ்டி'கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படவிருக்கின்றன.

நிலமில்லாதோருக்கு நிலம்

பிரகாசம் மந்திரி சபையின் திட்டப்படி ஒரு இலட்சம் ஏகர் வழங்கப்பட்டதாம்

நிலமில்லாதோருக்கு நிலம் தருவது என்ற பிரகாசம் மந்திரி சபைக் காலத் திட்டப்படி, 1954-ம் ஆண்டில் மட்டும் ஆந்திர மாநிலத்தில் சுமார் ஒரு இலட்சம் ஏகர் நிலம், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத் தரப்பட்டிருக்கிறது என்றும், இந்தக் கொள்கையை இப்போதுள்ள கோபாலரெட்டி மந்திரி சபை திருத்தி அமைத்து, தரிசு நிலங்களை இப்போதுள்ள மார்க்கெட் விலைக்கு விற்று வருவதாகத் தெரிகிறது.

எவ்வளவு தெரியுமா?

புதுடில்லி, ஏப். 17—

தொழில் துறைச் சிப்பந்திகளுக்கு சர்க்கார் உதவியுடன் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், மொத்தம் 460 குடியிருப்புகள் கட்டுவதற்காக, 1956 பிப்ரவரி மாதத்தில் கடன் தொகைகளாகவும் உதவித் தொகைகளாகவும் மொத்தம் ரூ. 16,43,060 வழங்க இந்திய சர்க்கார் அனுமதியளித்திருக்கின்றனர்.

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட இடங்களில் 'நம் நாடு' இதழ்களை விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்புமிக்க ஏஜெண்டுகள் தேவை:—

- திருச்சி
- திருநெல்வேலி
- காஞ்சீபுரம்
- யாழ்ப்பாணம்
- இராசபாளையம்
- திசையன்விளை

அடிமை நிலை மாள-தாயகம் மீள

சென்னைசர்க்காருக்குசம்பத்சாட்டை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கூச்சலிட்டதுபோல நினைத்துக்கொண்டு காங்கிரஸ் ஆபத்சகாயர்கள், 'மக்களே கவலை கொள்ளத் தேவை இல்லை. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் இவர்களை' என்று மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

"ஆனால், கழகம் வளர்ந்து நாட்டு மக்கள் தங்களின் பிரச்சினைகள் அனைத்திற்கும் கழகத்தின் கருத்தென்ன என்பதை அறிய ஆவல் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலை மலர்ந்துள்ள இன்று, மக்களுக்கு விண்ணப்பம் போடுகிறார்கள். 'மக்களே இவர்கள் வலையில் விழுந்து விடாதீர்கள். இவர்கள் பேச்சிலே மயங்கிவிடாதீர்கள்' என்று.

"மக்களிடத்தில் நம் வளர்ச்சியைப் பற்றிக்கூறி ஆட்சியாளர்கள் இவர்களை வளரவிடாதீர் என்று பேசுகின்றனர்—கேட்டுகொள்கின்றனர்.

"தி. மு. கழகத்தின் வளர்ச்சியை எதிரிகளின் வாயால் கேட்பதே தனிரசமான இன்பம் தரக் கூடியதாகும்.

"நாம் வளருகிறோம், என்பது மகிழ்ச்சிக்குரியதுதான் என்றாலும் கழகம் வளரும்போது கூடவே நமது பொறுப்புகளும் அவற்றின் தரமும் வளருகின்றன என்பதையும் நாம் மனதில் கொண்டாக வேண்டும்.

"நாட்டு மக்கள் இன்று, தி. மு. கழகத்திடம் சகலத்தையும் எதிர்பார்க்கிறார்கள்.

"மக்கள், தங்களுடைய நீண்ட நாளைய பிரச்சினையானாலும், அன்றாடப் பிரச்சினைகளானாலும், எந்தப் பிரச்சினையானாலும், தி. மு. கழகம் அதற்கு என்ன பரிகாரம் கூறுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள பெருவிருப்பமுடையவர்களாயிருக்கிறார்கள்.

"இந்த நிலை மகிழ்ச்சிக்குரியது மட்டுமல்ல, நமது கூரிய கவனத்திற்குரியதாகும்.

"இந்த நிலை வளர்ந்துள்ள நேரத்தில்தான், தி. மு கழக மாநில மாநாடு திருச்சியில் நடைபெறவிருக்கிறது. வழக்கமாக மாநாடுகளுக்குத் தரும் விளம்பரம் என்று எவரும் கருதக்கூடாது — நமது மாநில மாநாடு, தமிழ் நாட்டின் அரசியலில் மட்டுமின்றி உலகின் அரசியலிலும்கூட மகத்தான திருப்பத்தைச் சாதிக்கக்கூடிய ஒன்றாகும்.

"உலகம் இன்றையதினம் நம்மைப் பூரணமாகத் தெரிந்து கொள்ளாதிருக்கலாம். நமது நடவடிக்கைகள் இங்குள்ள பத்திரிகைகளால் இருட்டடிப்புச் செய்யப்படலாம். நாளையும் நாம் அறியப்படாமல் இருக்கலாம். ஆனால் நாளைய மறுதினம் உலகம் நம்மைத் தெரிந்துகொள்ளத்தான் போகிறது.

"நாம் எடுத்துக் கூறி வந்துள்ள பிரச்சினைகள் இன்று மக்களின் உயிர் பிரச்சினைகளாகும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

"நமது கோரிக்கைகள் பேராசையின் விளைவாக எழுந்தவை அல்ல; அல்லது வெறும் கனவுகளல்ல; அல்லது ஆத்திரத்தில் கிளப்பப்பட்டவையுமல்ல அவை. நமது கோரிக்கைகள் சிலவற்றில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் இன்னுஞ் சிலவற்றில் வெற்றி பெற வேண்டிய நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

"கடந்த பிப்ரவரி 20-ந் தேதி தமிழகமெங்கும் ஒரு பெரும் அர்த்தால் — கடையடைப்பு — பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது உடனே, 'தேவிகுளம்—பீர்மேடு, தமிழர்களுக்கு கிடைத்து விட்டதா?' என்று கேட்கிறார்கள்.

"தேவிகுளம்—பீர்மேடு கோரிக்கைகளில் நாம் வெற்றி பெறுவோமா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், அர்த்தால், நாடகத்தின் முதல் காட்சிதான். முதல் காட்சி முடிந்த உடனேயே முடிவென்ன என்று கேட்கிறார்கள், எப்படி இப்போதே முடிவைக் கூற முடியும்?

"அர்த்தால் நடைபெற்றதினால் என்ன பலன் என்று கேட்பவர்கள் வேறொன்றையும் கேட்கிறார்கள். 'இந்த தேவிகுளம்—பீர்மேடு பிரச்சினைக்கு இறுதியாகத்தான், மாநிலப் புனரமைப்பு மசோதா வந்துவிட்டதே! இந்த மசோதாதான் இறுதியான முடிவாகும்' என்று!

"தேவிகுளம்—பீர்மேடு பிரச்சினைக்கு, இந்த இந்த மசோதாதான் இறுதியான முடிவென்று எண்ணுவது பேதமை. உலகத்தில் 'இதுதான் இறுதி முடிவு' என்று வர்ணிக்கப்பட்ட மசோதாக்கள், தாம்பரபட்டையங்களில் பொறிக்கப்பட்டவைகள், கல்வெட்டுகளில் செதுக்கப்பட்டவைகள் எல்லாம் தூள்தூளாக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இருக்கும்போது, மந்திரிகள் கொண்டுவரும் இந்த மசோதாதான் இறுதி முடிவென்பது பேதமையல்லாமல் வேறென்ன?

"மசோதாவின் உயிர், கவர்னரின் கையெழுத்தல்ல என்பதையும், மக்களின் தெளிவான சம்மதம்தான் ஒரு மசோதாவின் உயிர் என்பதையும் மசோதாவின் கர்த்தாக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

"நமது கோரிக்கையில், பரிபூரணமான நியாயம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் நிதர்சனமாகத் தெரிவதாகும். அந்த நியாயம், ஆட்சியாளரால் உணரப்படாமல் — ஒப்புக்கொள்ளப்படாமல் போனது ஏன்?

"'தமிழ் நாடு' என்று ஏன் சென்னையின் பெயர் மாற்றப்படவில்லை. மாற்றுது ஆட்சேபித்ததற்கு ஆட்சியாளர்கள் என்ன காரணம் காட்டுகிறார்கள்?

"'மெட்ராஸ்' என்றிருந்தால் எல்லோருக்கும் தெரியும் என்கிறார்கள்.

"அப்படியானால், எல்லோருக்கும் தெரிந்திருந்த இந்தியா என்ற பெயரை ஏன் 'பாரத்' என்று மாற்றினார்கள்?

"'பாரத்' என்று மாற்றிவிட்டதனால் இந்தியா எங்கே இருக்கிறது என்று அடையாளம் தெரியாமல், புல்கானின் குருஷ்சேவ் விமானம், திபெத் நாட்டிலேயா போய் இறங்கிற்று.

"'பார்லிமெண்ட்' என்றிருந்த பெயரை 'லோக்சபா' என்று மாற்றினார்களே எவரேனும் இடம் தெரியாமல் விலாசம் விசாரித்துக் கொண்டிருந்தார்களா?

"'ராஜ்ய சபை' என்று மாற்றினார்களே, அடையாளம் தெரியாமல் மந்திரிகள் எவரும் திண்டாடினார்களா? 'தமிழ் நாடு' என்று பெயரிடுவதால் எப்படி எல்லோருக்கும் தெரியாமல் போய்விடும்?

"தேவிகுளம்-பீர்மேடு தமிழகத்துடன் தான்சேரவேண்டும் என்பதற்கு எத்தனை நியாயங்களை நாம் எடுத்துக் காட்டினோம். அதுவும் சர்க்கார் வகுத்துள்ள கோட்டுக்குள் நின்றுகொண்டு, அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட அடிப்படை நியாயங்களில் எந்த நியாயத்தின்படி பார்த்தாலும் தேவிகுளம்—பீர்மேடு வட்டங்கள் தமிழகத்துடன் தான் சேரவேண்டுமென்றுகிறது.

"வரலாறு அந்த வட்டங்கள் தமிழ் நாட்டிற்குச் சொந்தம் என்று கூறுகின்றன. 130 ஆண்டுகளுக்கு முன்புவரை அந்தப் பகுதிகள் தமிழ் நாட்டிற்குச் சொந்தமானவையாயிருந்திருக்கின்றன. இதற்கு ஆதாரங்கள்ஏராளம் உண்டு. அங்கு ஏலக்காய் தோட்டத்தின் பரப்பளவு 96,000 ஏகர் என்றால், அதில் 76,000 ஏகர் தமிழ் முதலாளிகளுடையது. 10 ஆயிரம் ஏகர் மட்டுமே மலையாளிகளுடையது. எஞ்சிய பத்தாயிரம் ஏகர், எதிலும் நமது பங்காளிகளாயிருக்கிற வடநாட்டுக்காரர்களுடையது. இப்படி ஊடமையாளர்கள் தமிழர்தான்; அங்கே உழைப்பவர்களும் தமிழர்கள்தான்.

"மலையாள மொழியும் மக்களும் தோன்றி இன்றைக்கு சுமார் 600 ஆண்டுகள்தான் ஆகின்றன என்று வரலாறு தெரிவிக்கிறது. இந்த 600 ஆண்டுகளாக, மலையாளத்தையும் தமிழகத்தையும் பிரித்து வைக்கும் ஒரு இயற்கையான எல்லையாக, மேற்குத் தொடர்ச்சி மலைகள் இருக்கின்றன. இந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் மலைவளம் முழுதும் தமிழகத்திற்கே சொந்தமாயிருந்தன. இன்று, சென்னை ஆட்சி பீடத்திலே உள்ள வடவருக்குக் கொடி பிடிக்கும் கோணங்கிகளினால், தமிழரின் மலைவளம் பறிபோகிறது. வரலாற்றுப் படியோ, பூகோள ரீதியாகவோ, மொழிவழியாகவோ எப்படிப் பார்த்தாலும், தேவிகுளம்-பீர்மேடு பகுதிகள் தமிழருக்குத்தான் என்பதிலே உள்ள நியாயங்கள் எவராலும் மறுக்கப்படவில்லை.

"ஆனால், சென்னை சட்டசபையில், மாநில புதுஅமைப்பு மசோதா பற்றிய தீர்மானத்தைப் பிரேரேபித்த மந்திரி, இந்த நியாயங்கள் குறித்து; நாம் எழுப்பிய கேள்விகள் குறித்து, விளக்கமும் பதிலும் தந்தவிட்டல்லவா தீர்மானத்தைப் பிரேரித்திருக்க வேண்டும்?

தேவிகுளம்—பீர்மேடு தமிழர்களுக்குத்தான் என்பது நியாயமானதே என்றாலும், ஏன் அவை தமிழகத்துடன் சேர்க்கப்படவில்லை தெரியுமா? என்று காரண விளக்கம் கூறிவிட்டல்லவா அவர் தீர்மானத்தைப் பிரேரித்திருக்க வேண்டும். பேசும் மந்திரியான சுப்பிரமணியம் நியாயங்களைத் துலக்கியவர்கள்மீது வசைமாரி பொழிந்துவிட்டுத்தான் தீர்மானத்தைப் பிரேரித்தாரே தவிர, நியாயங்களைத் 'துலக்கிவிட்டல்ல!'

காசியின் பெயர் 'வாரணசி'யாகிறது!

மே. 24 முதல் அமுலாகுமாம்!

லட்சுமணபுரி, ஏப். 17—

காசிக்கு ஆங்கிலத்தில் 'பெனாரஸ்' என்று உள்ள பெயரை, 'வாரணசி' என்று மாற்ற உத்திரப் பிரதேச சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். புத்தரின் 2,500-வது பிறந்த நாளாகிய மே 24-ந் தேதி இப்பெயர் அமுலுக்கு வரும்.

'வாரணசி' என்ற பெயர் காசி என்பதையும்விட பண்டைப் பெருமை வாய்ந்ததென்றும், இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களில் இப்பெயர்தான் இருக்கிறதென்றும் கூறப்படுகிறது. பண்டைப் பெருமை வாய்ந்தப் பெயர் என்பதால் காசிக்கு 'வாரணசி' என்ற பெயர் மாற்றுகிறார்கள் உத்திரப் பிரதேச சர்க்கார்! ஆனால் இங்குள்ள நம் சென்னை சர்க்காரோ 'தமிழ் நாடு' என்று பெயர் மாற்றவும் தன்மானமிழந்திருக்கிறார்கள்!

மாநாட்டில் கடைகள் வைக்க!

மாநில மாநாட்டின் செயற்குழு முடிவுப்படி மாநாட்டின் உள்ளே வைக்கப்படும் கடைகளையும், உணவு விடுதியையும் திருச்சி தோழர் எஸ். ஏ. ஜி. ராபி அவர்களுக்கு மொத்தமாக ஏலம் விடப்பட்டது.

எனவே கடைகள் வேண்டுவோர் எஸ். ஏ. ஜி. ராபி, அல்லிமால் தெரு, திருச்சி என்ற முகவரிக்கு எழுதி பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

★

மாநாட்டில் ஒளி-ஒலி ஏற்பாடு

திருச்சியில் மே. 17, 18, 19, 20-ல் நடைபெற விருக்கும் தி. மு. கழக மாநில மாநாட்டின் ஒளி—ஒலி அலங்கார வேலைகளை திருச்சி தோழர் எஸ். ஏ. ஜி. ராபி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, வேலைகளை கவனித்து வருகிறார்.

அழகிரி நினைவுநாளும் ஆண்டு விழாவும்

19-4-56 வியாழன் மாலை 6-மணிக்கு, சென்னை மூலக்கோத்தளம் பெரியபாளையத்தம்மன் திடலில் வே. வ. வேந்தன் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள், சி. பி. சிற்றரசு, நீல. துரைக்கண்ணன், சி. ஆர். பாலசுந்தரம், தி. போ. போகேந்திரன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

கழகக் கூட்டம்

★

மாயூரம் :
(மாயூரம்நகரப் பூங்காவில்)
20—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
து. காசிநாதன்

பேசுவோர்:
அண்ணா
என். வி. நடராசன்
என். கிட்டப்பா

★

நீலவெளி :
தி மு. கழகத் துவக்க விழா
22—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
என். கிட்டப்பா

பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
சி. ஜம்பு
கே. எஸ். சௌந்தரராசன்

★

நரசிங்கன்பேட்டை :
தி. மு. கழகத் துவக்க விழா
23—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
கோ. சி. மணி

பேசுவோர்:
என். வி. நடராசன்
என். கிட்டப்பா

கொடியேற்றுபவர் :
கே. எஸ். சௌந்தரராசன்

இசை நிகழ்ச்சி உண்டு.

★

மூன்றும்கட்டளை
(பூந்தமல்லி அருகில்)
19—4—56 மாலை

பேசுவோர் :
என். வி. நடராசன்
கண்ணதாசன்
சத்தியவாணிமுத்து
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

பம்பாய் துறைமுகத் தொழிலாளர் போராட்டம் வலுக்கிறது

3,300 பேர் உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

பம்பாய் துறைமுகத்தில் இந்திய கடற்படைத்தளத்தைச் சேர்ந்த 'சிவிலியன்' ஊழியர்கள் போராட்டம் இப்போது வலுத்து வருகிறது.

3,000 பேருக்கு அதிகமானோர் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர் என்று தெரியவருகிறது.

இப்போது, இந்த வேலை நிறுத்தம் கடற்படை ஆயுதக் கிடங்கிற்கும் பரவி, அங்கு பணிபுரியும் 300 ஊழியர்களும் இப்போது உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் சேர்ந்து கொண்டிருக்கின்றனர் என்றும் தெரிகிறது.

தங்களுக்கும் நிர்வாகிகளுக்குமிடையில் ஏற்படக்கூடிய தகராறுகளைத் தீர்த்துவைக்க, நிரந்தரமானதோர் ஏற்பாடு வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வெளியிட்டுள்ளனர். இது ஈடேறும்வரை வேலை நிறுத்தம் கைவிடப்படமாட்டாது என்று தொழிலாளர் தலைவர்கள் தெரிவிக்கின்றனராம்.

ஓய்வு நாள் குறித்தும் தொழிலாளர்கள் மற்றுமோர் கோரிக்கை தெரிவித்திருக்கின்றனராம்.

பருத்தி விதை எண்ணைக்கு வரி குறையும்!

புதுடில்லி, ஏப். 17—

பருத்தி விதை எண்ணெய்க்கு, ஒரு பவுண்டிற்கு அரையணாவாக விதிக்கப்பட்ட வரியை, இப்போது காலணாவாகக் குறைத்திருப்பதாக, நிதி மந்திரி தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

நிதி மசோதாவை பிரேரேபித்துப் பேசிய அவர், உத்தேசிக்கப்பட்டுள்ள வரி விதிப்பில் மாறுதல் எதுவும் செய்வது அவசியமெனத் தான் நினைக்கவில்லை என்றும், வரி விதிப்புகள் குறித்துக் கூறப்பட்ட கருத்துக்கள் அத்தனையையும் பரிசீலித்த பின்பேதான் இந்த முடிவுக்கு வந்ததாயும் தெரிவித்திருக்கிறார்.

நேரடி வரி விதிப்பில் சிறு நிவாரணங்கள் அளிப்பது அவசியந்தானென்றாலும் துணி, மற்றும், எண்ணெய்களுக்கான வரி விதிப்பில் மாறுதல் எதும் தேவை என நான் கருதவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார் எனத் தெரிகிறது.

இந்தியாவின் 19 மாநிலங்களில் நில உடைமைகள் சம்பந்தமாகக் கணக்கெடுப்பு வேலை முடிவடைந்துள்ளதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

திராவிடரே! திருச்சியில் திரளுவீர்